# ASNN நிறுவனத்தின் தொண்டார்வ ஆசிரியர்களின் திறன் மதிப்பீட்டு அறிக்கை

13 அக்டோபர் 2015





நிதி அனுசரணை:
ஸ்பைஸ்

இலகுபடுத்தல் :
பல்ற்ரா

# உள்ளடக்கம்


1 அறிமுகம் ........ 1

2 ஆய்வின் நோக்கம் ........ 2

2.1 முக்கிய நோக்கம் ........ 2

2.2 குறிப்பிட்ட நோக்கங்கள் ........ 2

3 ஆய்வின் பெறுபேறுகள் ........ 3

3.1 வயது அடிப்படையிலான பகுப்பாய்வு ........ 3

3.2 கல்வித்தகைமைகள் ........ 4

3.3 தொண்டார்வ ஆசிரியர் சேவை அனுபவம் ........ 5

3.4 ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் ........ 6

3.5 சுய மதிப்பீடு : வேறுபட்ட விசேட தேவையுடையோர் ........ 7

3.6 சுய மதிப்பீடு: விசேட தேவையுடைய சிறுவர்களின் விசேட தேவைகளை பகுத்தறிதலும் மற்றும் ஒழுங்கமைத்தலும் ........ 8

3.7 சுய மதிப்பீடு – விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் அவர்களுடன் பணியாற்றுதல் ........ 9

3.8 தொண்டர் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் ........ 10

3.9 சவால்களை வெல்வதற்கான பரிந்துரைகள் ........ 11

4 பரிந்துரைகள் ........ 13

**1. சட்டகங்கள்........ 1-11**

சட்டகம் 1 : ஆசிரியர்களின் வயது

சட்டகம் 2 : ஆசிரியர்களின் கல்வித்தகைமைகள்

சட்டகம் 3 : ஆசிரியர் சேவை அனுபவம்

சட்டகம் 4 : ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள்

சட்டகம் 5 : விசேட தேவையுடையோர் தொடர்பான அறிவு

சட்டகம் 6 : விசேட தேவைகளை பகுத்தறிதலும் மற்றும் ஒழுங்கமைத்தலும்

சட்டகம் 7 : விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் அவர்களுடன் பணியாற்றுதல்

சட்டகம் 8 : தொண்டர் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

சட்டகம் 9 : சவால்களை வெல்வதற்கான பரிந்துரைகள்

# 1 அறிமுகம்

ASNN நிறுவனம் மாற்று திறனாளிகளுக்கான தனது சேவையை அம்பாறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் கடந்த ஏழு வருடங்களாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. மாற்று திறனாளிகளாக கண்டறியப்பட்ட மாணவர்களை பாடசாலைகளுக்கு உள்வாங்கப்பட்டதன் பின்னர் பாடசாலை முகாமைத்துவத்துடன் இணைந்து ASNN நிறுவனம் தனது சேவையை முன்னெடுக்கிறது. ASNN நிறுவனத்தினூடாக அரச பாடசாலைகளில் மாற்று திறனாளிகளாக இனங்காணப்பட்ட மாணவர்கள் வயதின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வகுப்பறை ஊடான கல்வியை செயற்படுத்துவதோடு இந்த மாற்று திறனாளிகளுக்கான கல்வி கற்பித்தல் செயற்பாடுகளில் ASNN நிறுவனம் ஊடாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் செயற்பட்டு வருகிறார்கள். இவ்விசேட தேவையுடையோர் கல்வியானது 13 கிராம பாடசாலைகளில் இயங்கிவருவதாக ASNN நிறுவனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

SPICE நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி வழங்குதல் ஊடாக செயற்படுத்தப்படும் இயலுமை விருத்தி திட்டத்தின் கீழ், இயலுமை விருத்தியில் பங்காளர் நிறுவனமாக செயற்படும் பல்றறா நிறுவனம், ASNN நிறுவனத்தின் மீதான ஆரம்பக்கட்ட சுய மதிப்பீட்டினை நடத்தியது. இதன்போது இனங்கண்டதற்கு ஏற்ப நிறுவனத்தின் அபிவிருத்தி நோக்கமாக தொண்டர் ஆசிரியர்களின் இயலுமை விருத்தி தேவைகளை இனங் காண்பது, ஆசிரியர்களின் சேவைகளை தொடர்ந்தும் பெறுவதற்கான/ நிரந்தர சேவையாக மாற்ற வழிமுறைகளை அறிந்து இயலுமை விருத்தி திட்டமொன்றை உருவாக்குதல் மற்றும் அரச மற்றும் பங்காளருடனான வலையமைப்புகளுடன் இணைப்புகளை ஏற்படுத்துதலுக்கான உபாயங்களை அறிதல் என்பன காணப்பட்டன.

இதனடிப்படையில் தேவை/திறன் ஆய்வு 2015, மே 23 - 25 ஆந் திகதி வரை பல்றறா நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாய்வில் ASNN நிறுவனம் ஊடாக கல்வி கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 30 ஆசிரியர்கள் பங்குபற்றினர். இந்த தேவை மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையானது தற்போது ASNN நிறுவனம் ஊடாக கல்வி கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 30 ஆசிரியர்களுடன், கேள்விக்கொத்தினை பாவித்து செய்யப்பட்ட கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலமாக பெற்றுக்கொண்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் திறன் மற்றும் அறிவு தொடர்பான மதிப்பீட்டினை செய்யவும், இவ்வாசிரியர்கள் தங்களது ஆசிரியர் சேவையை தொடர்ந்து வழங்குவதில்/ நிரந்தர ஆசிரியர் சேவையாக மாற்றிக் கொள்வதற்கு உள்ள இடர்பாடுகள் மற்றும் தேவையான தகைமைகளை அறிந்து

கொள்ளவும், மேலும் இத்துறையில் தமது சேவையை திறன்பட செய்வதற்கு மேலதிகமான துறைசார் பயிற்சிகள்/ கல்வி வாய்ப்புகள் என்ன என்பது பற்றி இனங்காண்பதன் மூலம் இயலுமை விருத்தி தொடர்பான பரிந்துரைகளை முன்வைத்தல் இந்த தேவை மதிப்பீட்டு அறிக்கையின் நோக்கமாகும்.

# 2 ஆய்வின் நோக்கம்

## 2.1 முக்கிய நோக்கம்

தொண்டர் ஆசிரியர்களின் திறன் விருத்தி மதிப்பீட்டினை முன்னெடுத்தல், திறன் விருத்தி திட்டம் வகுத்தலுக்கான பரிந்துரைகளை முன்வைத்தல் மற்றும் அரச மற்றும் பங்காளருடனான வலையமைப்புகளுடன் இணைப்புகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட சேவை நிலைத்திருப்பதற்கான மூலோபாயங்களை இனங்காணல்

## 2.2 குறிப்பிட்ட நோக்கங்கள்

- ASNN தொண்டர் ஆசிரியர்களின் திறன்/ தேவை மதிப்பீடு செய்தல் மற்றும் பரிந்துரைகளுடனான அறிக்கை தயாரித்தல்.
- தொண்டர் ஆசிரியர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினை இனங்காணுதல் மற்றும் பங்குபங்குபற்றல் மற்றும் சேவை வழங்கலை நீடித்திருப்பதற்கான மூலோபாயம் இனங்காணல்
- தேவை மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு இயலுமை விருத்தி திட்டம் வகுத்தலுக்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைத்தல்

# 3 ஆய்வின் பெறுபேறுகள்

## 3.1 வயது அடிப்படையிலான பகுப்பாய்வு




**சட்டகம் 1 : ஆசிரியர்களின் வயது**

வயதினடிப்படையில் நோக்குகையில் 21-25 வயதிற்கு இடைப்பட்ட ஆசிரியர்கள் 30% ஆகவும் 26-30 வயதிற்கு இடைப்பட்ட ஆசிரியர்கள் 30%ஆகவும் 31-35 வயதிற்கு இடைப்பட்ட ஆசிரியர்கள் 33% ஆகவும் மற்றும் 36 வயதிற்கு மேற்பட்டோர் 7% ஆகவும் காணப்படுகின்றனர்.

அரச சேவை ஆசிரியராக நியமிக்கப்படுவதற்கு ஆசிரிய சேவை சுற்றுநிருபத்தின்படி, வயது 18 – 35 இற்குள் இருக்க வேண்டுமென கூறப்படுவதன் படி பார்த்தால், 7% ஆனோர் 36 வயதிற்கு மேற்பட்டவராக காணப்படுவதனால் அவர்களுக்கு அரச சேவையில் இணையும் வாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றது. ஏதேனும் விசேட சுற்றுநிருபங்கள் முன்வைக்கப்பட்டால் இது சாத்தியமாகக் கூடும்.

வயதெல்லை 31-35 ஐ நோக்குகையில் குறித்த கல்வித் தகைமைகள் காணப்படுமிடத்து அரச ஆசிரியர்கள் சேவைக்கு உள்வாங்கப்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. எனினும், தற்போதைய நிலையின் அடிப்படையில் நோக்கும்போது, இவ்வயதினர் கல்வித்தகைமையைப் பெற்று வரும் நிலையில், குறித்த தகைமையை அடையும்போது இவர்களது வயது எல்லை கடந்தநிலை காணப்படலாம். இதன் காரணமாக இவர்கள் அரச ஆசிரியராக உள்வாங்கப்படலுக்கு இவர்களது வயது தடைக்காரணியாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் அரச ஆசிரியர் சேவைக்கு இணைவதற்காக இனி ஏதேனும் விசேட சுற்றுநிருபங்கள் முன்வைக்கப்படின் உள்வாங்கப்படலுக்கான சந்தர்ப்பங்கள் உருவாகலாம்.

20-25 மற்றும் 26-30 வயதெல்லையினரைக் குறிப்பிடுகையில் தகுதியான கல்விநிலையினைப் பெறும் சந்தர்ப்பத்தில் இவர்கள் அரச ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் உண்டு. எனினும் இவர்களின் தற்போதைய கல்வி நிலையே இவற்றை தீர்மானிக்கும். காரணம் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை போன்ற கல்வி நிறுவகங்களில் ஆசிரிய பயிற்சி உயர்கல்வி நிலைகளுக்கு உள்வாங்கப்படும் வயது எல்லை 25 ஆக காணப்படல், 26-30 வயதெல்லையினருனக்கு அரச ஆசிரிய நியமனம் பெறக்கூடிய பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க ஓர் முட்டுக்கட்டையாகக் காணப்படுகிறது. எனினும் தகுந்த ஆலோசனைகளைப்பெற்று இவற்றுக்கான முன்னெடுப்புகளை செயற்படுமிடத்து இவர்களுக்கான கல்விக்கான சந்தர்ப்பம் காணப்படுகிறது. ஏனையவர்கள் தங்கள் கல்வித் தகைமையை பொறுத்து விண்ணப்பிப்பதனை தீர்மானிக்கலாம்.

இவர்களது கல்வித் தகைமையுடனான பகுப்பாய்வு அடுத்து தரப்பட்டுள்ளது.

### 3.2 கல்வித்தகைமைகள்




**சட்டகம் 2 : ஆசிரியர்களின் கல்வித்தகைமைகள்**

சட்டகம் 2 இல் குறிப்பிடப்பட்டவாறு 27% ஆனோர் கல்வி பொதுத்தர சாதாரண தர மட்டத்தினை அடைந்தவர்களாகவும் அவற்றுள் 75% ஆனோர் (6 ஆசிரியர்கள்) 31வயது அல்லது 31 வயதிற்கு மேற்பட்டோர் ஆகவும் (பார்க்க சட்டகம் 1) மற்றும் 33% ஆனோர் கல்வி பொதுத்தர உயர் தர மட்டத்தினை அடைந்தவர்கள் ஆகவும் 37% ஆனோர் டிப்ளோமா பாடநெறியினை கொண்டவர்களாகவும் மற்றும் ஒருவர் தற்போது திறந்த பல்கலைக்கழகத்தில் கலைமானிப்பட்டப் படிப்பை மேற்கொள்பவராகவும் காணப்படுகின்றனர்.

அரச ஆசிரியர் சுற்றுநிருபங்களை நோக்குகையில் 27% ஆனோர் கல்வியில் க.பொ.த. சாதாரண தர மட்டத்தை கொண்டமைந்ததன் காரணமாக அவர்கள் அரச சேவையில் உள்ளெடுக்கப்படும் தகைமையினை வளர்க்கவேண்டிய கட்டாயம் காணப்படுகின்ற அதே சமயம் அவர்களின் வயதெல்லை இதற்கான தடங்கல் காரணியாகக் காணப்படுகிறது.

க.பொ.தராதர உயர் தர தகைமைகளைக் கொண்டவர்கள் மற்றும் டிப்ளோமா பாடநெறியினைக் கொண்டவர்கள் மேலும் தமது தகைமைகளை விருத்தி செய்யும் பட்சத்திலும், மற்றும் வயதெல்லையும் காணப்படின் அவர்கள் அரச ஆசிரியர்களாக உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகின்றது எனலாம். இச்சட்டகத்தின் அடிப்படையில் 22 ஆசிரியர்கள் அந்நிலைக்கு உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படுகிறது என கூறமுடியும். வலயக் கல்வி அதிகாரிகளினூடு விசேட விண்ணப்பங்கள் பாடசாலை அதிபரினால் அனுப்பப்படுமிடத்து வயதும் அனுபவமும் பொருந்துமாயின் அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படக்கூடிய வாய்ப்புகள் உருவாகலாம்.

### 3.3 தொண்டார்வ ஆசிரியர் சேவை அனுபவம்




**சட்டகம் 3 : ஆசிரியர் சேவை அனுபவம்**

23% ஆன ஆசிரியர்கள் 3வருடத்திற்கு குறைந்த தொண்டர் ஆசிரியர் சேவையையும் 77% ஆனோர் 3வருடத்திற்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர் சேவையையும் கொண்டுள்ளனர். ஏதேனும் விசேட சுற்றுநிருபத்திற்கு ஏற்ப இவர்கள் அரச ஆசிரியர்களாக உள்வாங்கப்படும் சந்தர்ப்பத்தில் 3வருடத்திற்கு கூடிய அனுபவமுடைய ஆசிரியர்கள் அரசசேவையில் உள்வாங்கப்படும் சந்தர்ப்பம் அதிகமாகக் காணப்படலாம் என்ற ஓர் அனுமானத்தினை முன்வைக்கலாம்.

### 3.4 ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள்




**சட்டகம் 4 : ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகள்**

90% மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகளாக விசேட தேவையுடைய சிறுவர்களுடன் பணியாற்றுதல், கற்பித்தல் முறைமைகள், வகுப்பறை முகாமைத்துவம் போன்றவையும் சமூக மட்ட புனர்வாழ்வு, சமூக உள்வாங்கல்கள், பராமரிப்பாளர்கள், சைகை மொழி, பிரெயில், உதவிக் கருவிகள், (தெரபிகள்) சிகிச்சை உதவிக்கான உத்திகள் முதலுதவிகள் சிறுவர் உரிமை மற்றும் வேறு ஆசிரியர்களை பயிற்றுவித்தல் தொடர்பானவை உள்ளடங்குகின்றன.

இவற்றை நோக்குகையில் தொண்டர் ஆசிரியர்கள் இப்பயிற்சிகளின் மூலம் ஆசிரியர்களாக தொழிற்படக்கூடிய சிறந்த திறமைகளை பெற்றுள்ளனர் என விளங்கிக்கொள்ளலாம்.

ஒரு ஆசிரியர் மட்டுமே, மிக அண்மையில் சேவையில் இணைந்து கொண்டதால், கற்பித்தல் முறைமைகள் வகுப்பறை முகாமைத்துவம் தவிர்ந்த ஏனைய பயிற்சிகள் எவற்றையும் பெறவில்லை என குறிப்பிட்டுள்ளார். இவரை மேலும் பயிற்சிகளுக்கு உள்வாங்கல் சிறந்தது.

தொண்டர் ஆசிரியர்களின் பொறுப்புகளை சிறந்த முறையில் ஆற்றுதலுக்கான அறிவு திறன் மற்றும் மனப்பாங்குகளை விருத்திசெய்வதற்காக இப்பயற்சிகள் ASNN நிறுவனத்தினால் தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 3.5 சுய மதிப்பீடு : வேறுபட்ட விசேட தேவையுடையோர்




**சட்டகம் 5 : விசேட தேவையுடையோர் தொடர்பான அறிவு**

வேறுபட்ட விசேட தேவையுடையவர்களை இனங்காணும் திறன் தொடர்பான அறிவு 80% இற்கு மேற்பட்டோருக்கு காணப்படுவதாகவும் மற்றும் விசேட தேவையுடையவர்கள் தொடர்பான அறிவு மிகக் குறைந்தளவானோருக்கு, மேற்குறிப்பிட்டுள்ள சட்டகத்தின் அடிப்படையில் 3% மட்டுமே மாற்றுத்தேவைகள் தொடர்பான அறிவுத் தேவை மேலும் விருத்திசெய்யப்படல் வேண்டும் என கூறியுள்ளனர்.

மேலும் ஒட்டுமொத்த திறன் மதிப்பீட்டினைக் குறிப்பிடுகையில் ஒரு ஆசிரியர் மட்டுமே குறைந்த திறன்களைக் கொண்டவராக காணப்பட்டார். காரணம் அவர் இரு மாதங்களுக்கு முன்பே இங்கு தொண்டார்வ ஆசிரியராக கடைமையில் ஈடுபட ஆரம்பித்துள்ளார்.

வேறு மேலும் பயிற்சிகள் ஒழுங்குபடுத்தப்படும் சந்தர்ப்பத்தில் விசேட தேவையுடையவர்கள் தொடர்பான சமூக உள்வாங்கல் மற்றும் சமூக புனர்வாழ்வு தொடர்பான செயற்பாடுகளை கருத்திற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் காணப்படுகிறது. தற்போது இவை தொடர்பான அறிவுமட்டம் குறைந்த நிலையில் காணப்படுதல் முக்கிய காரணமாகும்.

### 3.6 சுய மதிப்பீடு: விசேட தேவையுடைய சிறுவர்களின் விசேட தேவைகளை பகுத்தறிதலும் மற்றும் ஒழுங்கமைத்தலும்




**சட்டகம் 6 : விசேட தேவைகளை பகுத்தறிதலும் மற்றும் ஒழுங்கமைத்தலும்**

அனைத்து பதிலீடுகளையும் குறிப்பிட்டு நோக்கையில் 60% ஆன ஆசிரியர்கள் தாம் விசேட தேவையுடைய மாணவர்களையும் தேவைகளையும் பகுத்தறியும் ஆற்றல் கொண்டுள்ளனர் என கூறியுள்ளனர். ஒருவர் மட்டுமே இவை தொடர்பான குறைந்த அறிவைப்பெற்றுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மற்றும் விசேட பயிற்சிகள் தேவை எனக்குறிப்பிட்டுள்ளார்.

வேறுபட்ட விசேட தேவையுடையோர் மற்றும் விசேட தேவைகள் தொடர்பான பயிற்சிகள் வருங்காலத்தில் தொடர்ந்த பயிற்சிகள் மூலம் வலுவூட்டப்படல் வேண்டும்.

## 3.7 சுய மதிப்பீடு – விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் அவர்களுடன் பணியாற்றுதல்




**சட்டகம் 7 : விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் மற்றும் அவர்களுடன் பணியாற்றுதல்**

அனைத்து பதிலுனர்களையும் நோக்குகையில் 70% ஆன ஆசிரியர்கள் விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு கற்பித்தல் மற்றும் சேவை செய்தல் தொடர்பான விடயங்களில் சிறந்து விளங்குவதாகக் காணப்படுகிறது.

சமூக உள்வாங்கல் மற்றும் சமூகமட்ட விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள் தொடர்பாக மேலும் பயிற்சிகள் வழங்கப்படவேண்டிய தேவை காணப்படுகிறது.

மேலும் புதிய ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான திறன்கள் விருத்திசெய்யப்படல் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 3.8 தொண்டர் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

| சவால்கள் | குறிப்பிட்ட வீதம் | வரிசைப்படுத்தல் |
|---|---|---|
| சமூகத்திலும் மற்றும் பாடசாலையிலும் தொண்டர் ஆசிரியருக்கான அங்கீகாரம் இல்லாமை | 70% | 1 |
| குறைந்த ஊதியம் வழங்கப்படல் | 50% | 2 |
| தொண்டர் ஆசிரியராகக் காணப்படுவதால் ஏனைய ஆசிரியர் மத்தியில் மதிப்பு கிடைக்கப்பெறாமை | 43% | 3 |
| போக்குவரத்து பிரச்சினை காரணமாக பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் அக்கறை காட்டாமை | 30% | 4 |
| பாடசாலையின் உதவிகள் சிறந்த முறையில் தொண்டர் ஆசிரியருக்கு கிடைக்காமை(பாடவிதானம் வழங்கப்படாமை புத்தகம் இடவசதி மற்றும் தளபாடம்) | 27% | 5 |
| ஆசிரியர்களுக்கு போக்குவரத்திற்கான போதுமான பணம் வழங்கப்படாமை | 23% | 6 |
| சமூகத்திலும் பாடசாலையிலும் விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான அங்கீகாரம் அற்ற நிலை (செயற்பாடுகளில் உள்வாங்கப்படாமை) | 23% | 7 |
| பெற்றோர் ஆசிரியர் மற்றும் சிறுவர்களுக்கிடையில் புரிந்துணர்வு அற்ற நிலை ( பெற்றோர் ஆசிரியர்களை ஏற்றுக்கொள்ளாமை மற்றும் புரிந்துணர்வு அற்ற நிலை சிறுவர்களை பராமரிக்கும் முறை மற்றும் மன அழுத்தம்) | 20% | 8 |
| சமூகத்திற்கு விசேட தேவையுடைய சிறுவர்கள் தொடர்பாக விழிப்பூட்டல் வழங்குதல் | 7% | 9 |
| விசேட தேவையுடைய கல்வி தொடர்பாக விருத்திசெய்வதற்கு நிதி பற்றாக்குறை காணப்படல் | 7% | 10 |
| ஏனைய ஆசிரியர் போன்று உரிமைகள் காணப்படவில்லை | 7% | 11 |
| சைகை மொழி மூலமான கல்வியின்மூலம் பூரண அறிவைப்பெற முடியாமை | 3% | 12 |
| ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த மாணவர்கள் தொகை | 3% | 13 |

**சட்டகம் 8 : தொண்டர் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்**

இந்த ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் முதல் கட்ட சவாலாக பாடசாலையிலும் மற்றும் சமூகத்திலும் தொண்டர் ஆசிரியருக்கான அங்கீகாரம் காணப்படாமையானது முன்னிலை வகிக்கின்றது. குறைந்த ஊழியம் வழங்கப்படலானது

இரண்டாவது சவாலாகக் காணப்படுகிறது. மூன்றாவதாக தொண்டார்வ ஆசிரியர்களாகக் காணப்படுவதன் காரணமாக ஏனைய பணியாளர்களால் மதிக்கப்படாது காணப்படல் மற்றும் அதனை அடுத்த சவாலாக பெற்றோர்கள் போக்குவரத்து பிரச்சினை காரணமாக தமது விசேட தேவையுடைய மாணவர்களில் கவனமின்மையும் பாடசாலை அனுப்புதலுக்கு அக்கறை காட்டாமையும் என்பன சவால்களாகக் காணப்படல்.

சுருக்கமாகக் குறிப்பிடின் 20% ற்கு மேற்பட்ட பணியாளர்கள் சமூக பார்வை மற்றும் சமூகத்திற்கு விழிப்புணர்வு அற்ற நிலை மற்றும் பொருளாதார நிலைமைகள் என்பனவே முக்கிய மூலாதாரக்காரணியாகக் காணப்படுகிறது.

### 3.9 சவால்களை வெல்வதற்கான பரிந்துரைகள்

| பரிந்துரைகள் | குறிப்பிட்ட வீதம் | வரிசைப்படுத்தல் |
|---|---|---|
| சமூகம் பெற்றோர் மற்றும் பாடசாலை ஆசிரியருக்கான விழிப்புணர்வூட்டல் ( வீடுகளுக்கு விஜயம் செய்தல்) | 47% | 1 |
| அரச ஆசிரியர்கள் தரத்திற்கு தகைமைகள் உயர்த்தப்படல் (அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிலை) | 40% | 2 |
| கல்வித்தகைமைகளை தொழிலிற்கு ஏற்ற வகையில் உயர்த்துதல் | 37% | 3 |
| பாடசாலை மட்டத்தில் விசேட தேவையுடைய சிறுவர்கள் மற்றும் அவர்களின் திறமைகளை மேடையேற்றுதல் | 23% | 4 |
| விசேட தேவையுடைய சிறுவர்களின் திறன்களை அதிகரித்தல் | 23% | 5 |
| தொழிலின் தன்மையை மாற்றுதல் (அரச நியமனம் பெறல்) | 13% | 6 |
| ஆசிரியர்களின் சேவை வழங்கல் தொடர்பான விழிப்புணர்வை வழங்குதல் | 13% | 7 |
| விசேட தேவையுடையவர்களுக்கான சமூக அங்கீகாரம் உருவாக்குதல் | 10% | 8 |
| அரச ஆசிரியர்களாக காணப்படும் சந்தர்ப்பத்தில் பிரச்சினைகள் காணப்படாது எனவே அரச ஆசிரியர் நியமனம் பெறல் | 10% | 9 |
| பாடசாலையுடன் சிறந்த உறவுகளை ஏற்படுத்தல் | 7% | 10 |
| கற்பித்தலுக்கு விசேட வழிமுறைகளைக் கையாளுதல் (விளையாட்டுச் செயன்முறைகள்) | 7% | 11 |
| தொலைக்காட்சி விளம்பரம் செய்தல் | 3% | 12 |

**சட்டகம் 9 : சவால்களை வெல்வதற்கான பரிந்துரைகள்**

20% இற்கு மேற்பட்டோர் விசேட தேவையுடைய சிறுவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவந்து அவர்கள் தொடர்பான விழிப்புணர்வூட்டல் செய்தல் மூலம் சவால்களை அணுக முடியுமென குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது கல்வித்தகைமைகளை உயர்த்துதல் மூலம் அவர்களது சவால்களை அணுகமுடியுமெனக் குறிப்பிட்டுள்ளனர்.

அடுத்த கட்டமாக 10 - 13% ஆனவர்கள் குறிப்பிடுகையில் சமூக அங்கீகாரம் பெறல் மற்றும் வேலையின் தன்மையினை மாற்றுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அவர்களது சவால்களை எதிர் கொள்ள முடியுமென கூறப்பட்டுள்ளது.

இவற்றை மூன்று கட்டங்களாக குறிப்பாக நோக்குகையில் :

**சமூக மட்டம்**

- விசேட தேவையுடைய சிறுவர்கள் சமூக அங்கீகாரத்தை பெறக்கூடிய விதமாக உருவாக்கப்படல்
- சமூகம் பெற்றோர் மற்றும் பாடசாலை ஆசிரியருக்கான விழிப்புணர்வூட்டல் ( மாதத்திற்கு ஒருமுறை வீடுகளுக்கு விஜயம் செய்தல்)

**பாடசாலை மட்டம்**

- பாடசாலை மட்டத்தில் விசேட தேவையுடைய சிறுவர்கள் மற்றும் அவர்களின் திறமைகளை மேடையேற்றுதலுக்கான வாய்ப்புகளை அதிகரித்தல்
- தொண்டர் ஆசிரியர்களின் சேவை வழங்கல் தொடர்பான விழிப்புணர்வை சமூகம் மற்றும் பாடசாலை மட்டங்களில் வழங்குதல்

**நிறுவன மட்டம்**

- அரச ஆசிரியர்கள் தரத்திற்கு தகைமைகள் உயர்த்தப்படல், அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிலை பெற உதவுதல்

## 4 பரிந்துரைகள்

1. **அரச ஆசிரியராக உள்வாங்கப்படுவதற்குரிய கல்வித்தகைமைகளை விருத்தி செய்தலுக்கான உதவிகளை வழங்குதல்**

- கல்வி முறைமைகளாக

- தேசிய கல்வி நிறுவகத்தினால் மேற்கோள்ளப்படும் விசேட தேவையுடையோருக்கான டிப்ளோமா பாடநெறி : தொண்டர் ஆசிரியர்களின் பயிற்சி அனுபவத்துடன் பாடநெறியினுள் நுழையக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்தல். காரணம் தேசிய கல்வி நிறுவகத்தினால் வழங்கப்படும் பாடநெறிக்கான அனுமதிகள் பெறப்படுதலுக்கான வரையறைகள் காணப்படலும் அவற்றின் அடிப்படையில் இத்தொண்டர் ஆசிரியர்களை இணைத்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளலும்.

- விசேட தேவையுடையோருக்கான கல்வியியல் பட்டப்பாடநெறி – திறந்த பல்கலைக்கழகம் : திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பாடநெறிக்கு உள்வாக்கப்படுவதற்கு காணப்படும் வரையறைகளை மீட்டுப்பார்த்து ASNN தொண்டர் ஆசிரியர்கள் எவ்வாறு தற்போதைய அனுபவத்துடன் உள்வாங்கப்படலாம் என்பதற்கான கலந்தாலோசனை பெறல் வேண்டும். குறிப்பாக வயது எல்லைகள் மற்றும் தற்போதைய கல்வியறிவு என்பனவற்றுடன் எவ்வாறு பட்டப்பாடநெறிக்கு உள்நுழையலாம் என்ற ஆலோசனைகளைப்பெறல் வேண்டும்.

- க.போ.த சாதா.தர மட்டத்தில் உள்ளவர்களின் கல்வித்தகைமைகளை உயர்த்துவதற்கான உதவிகளை வழங்குதல்.

2. **அரச நியமனங்களைப் பெறுவதற்கான உதவிகளை வழங்குதல்**

- மாகாண சபைகள் மற்றும் மாகாண மட்ட கல்வி நிறுவனங்களுக்கு தொண்டர் ஆசிரியரின் சேவை தொடர்பாக கருத்திலெடுக்கும் படி பரிந்துரை செய்தலும் அவர்களுடன் இணைந்து வேலை செய்து இவர்களை அரச ஆசிரியர் முறைமைகளுக்கு உள்வாங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலும்.

- வலயக் கல்வி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து இவ்வாசியரிர்களுக்கு ஆசிரிய நியமனம் பெறும் வழிமுறைகள் காணப்படுகிறதா என ஆராயலாம்

3. **திறன் மற்றும் அறிவு மேம்படுத்தலுக்கான புதிய பயிற்சிகளை தொடர்ச்சியாக நிறுவனம் ஒழுங்குபடுத்தல்**

- கீழ் குறிப்பிட்ட பகுதிகள் கருத்தில் எடுக்கப்படல் வேண்டும் :
  - சமூக மட்ட மீள்புணரமைப்பு (Community Based Rehabilitation - CBR) தொடர்பான எண்ணக்கருக்கள்
  - சமூக உள்வாங்கல் செயன்முறைகள்
  - உடலியல் மற்றும் புலன் இயக்கம் தொடர்பான பிரச்சினைகள்
  - விசேட தேவையுடையோருக்கான பிரிவுகளில் அணுகும்/ புழங்கும் வசதிகள் மற்றும் பாதுகாப்பு முறைமைகள்
  - தற்போது இணைந்துள்ள ஆசிரியர்கள் அடிப்படை பயிற்சிகள் பெறல் ( விசேட தேவையுடைய சிறுவர்களின் வேறுபட்ட பரப்புகள் மற்றும் சமூக உள்வாங்கல்கள் மற்றும் சமூக மட்ட விழிப்பூட்டல்கள்)

4. தொண்டர் ஆசிரியர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளுதல்
ஊதியத்தினை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குதல் வளத்திரட்டல் மேற்கொள்ளுதல் பழைய மாணவர் சங்கங்களிடமிருந்து உதவி பெறுதல் அப்பிரதேசத்தின் சமய தலைவர் மற்றும் கொடை வழங்கும் சமூக ஆர்வலர்களிடம் உதவி பெறுதல்.

5. தொண்டர் ஆசிரியர்களின் சேவை பாராட்டல் செயற்பாடுகள் முன்னெடுத்தல்

6. தொண்டர் ஆசிரியர்களின் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான சந்தர்ப்பங்களை இனங்காணல். சமூக மட்டத்தில் சமூக மட்ட மீள்புணரமைப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்தல்

7. பாடசாலை மற்றும் சமூக மட்டத்திலான அங்கீகாரம் குறைதல் தொடர்பான பிரச்சினைகளை சமூக மட்ட மீள்புணரமைப்பு இடையீடுகளுக்குள் முன்னெடுத்தல். சமூக அங்கத்தவர் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் மூலம் இப்பிரச்சினைகளை முன்னெடுப்பது தொடர்பான செயற்பாடுகள்.

8. விசேட தேவையுடைய பிள்ளைகளை உள்வாங்கிய செயற்பாடுகளை முன்னெடுக்க பாடசாலை மட்டத்தினரை ஊக்குவித்தல்.